**இராணிப்பேட்டை வணிகவரி மாவட்ட துணை ஆணையரின் செயல்முறைகள்**

**வழங்குபவர்: திருமதி மா. நளினி, பி.எஸ்சி.,**

**[illegible] வார்டு II, எண்.25, முதல் தளம், ஒருங்கிணைந்த வணிகவரி கட்டடம்,**

**இரயில்வே ஸ்டேஷன் ரோடு, இராணிப்பேட்டை - 632401.**

**ந.க.எண்.அ1/773/2023**

**நாள்:** 04.06.2024
குரோதி வருடம்
வைகாசி மாதம் 22-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2055.

**பொருள்:** நியமனம் (நேரடி) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு அமைச்சுப்பணி இளநிலை உதவியாளர் பதவியை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு (தொகுதி-IV - தேர்வு நடைபெற்ற நாள்: 24.07.2022) தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் இராணிப்பேட்டை வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணி நியமனம் வழங்கப்பட்டது - பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தெர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1933/PSD-B1/2023, நாள்: 14.08.2023.
2. இணை ஆணையர்(மாநிலவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/9040/2023-II, நாள்: 01.09.2023.
3. துணை ஆணையர் (மாநிலவரி), இராணிப்பேட்டை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/773/2023, நாள்: 07.09.2023.
4. இணை ஆணையர்(மாநிலவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களின் ந.க.அ2/9040/2023, நாள்:21.05.2024.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-IV (தேர்வு நடைபெற்ற நாள்: 24.07.2022) தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, இராணிப்பேட்டை வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் **திரு. க. விக்னேஷ்வரன்** என்பவர், பார்வை மூன்றில் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, அவருக்கெதிரே குறிப்பிட்ட தேதியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

| வ.எண் | இளநிலை உதவியாளரின் பெயர் மற்றும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு. க. விக்னேஷ்வரன்,<br>உதவி ஆணையர்(மாவ) அலுவலகம்,<br>இராணிப்பேட்டை | 11.09.2023<br>முற்பகல் |

(த.பி.பா)

2. பார்வை இரண்டு மற்றும் நான்கில் காணும் வேலூர் வணிகவரி கோட்ட / சென்னை ஆணையர் அவர்களின் செயல்முறைகள் மற்றும் கடிதக்குறிப்பின்படி, கீழ்க்காணும் நிபந்தனையின் அடிப்படையில் தனியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

*The regularization is subject to the outcome of the Writ Petitions pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to this recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group-IV).*

3. இத்தனியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருத்தல் வேண்டும் எனவும், தகுதிகாண் பருவக்காலத்தில், தனியாளர் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சியும், பவானிசாகர் அடிப்படை பயிற்சியும் முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆணை வழங்கப்படுகிறது.

ஒம்/- மா. நளினி
துணை ஆணையர்(மாநிலவரி),
இராணிப்பேட்டை

பெறுநர்:
✓திரு. க. விக்னேஷ்வரன்,
இளநிலை உதவியாளர்,
உதவி ஆணையர்(மாவ) அலுவலகம்,
இராணிப்பேட்டை
(உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், இராணிப்பேட்டை மூலம்)

நகல்: இணை ஆணையர்(மாவ), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், இராணிப்பேட்டை
(தனியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளிடும் பொருட்டு)

நகல்: முக்கிய ஆணைத் தொகுப்பு

உபரி: 1

// உண்மை நகல் / உத்தரவுப்படி //

4/6/2024
மாநிலவரி அலுவலர்
(மறுஆய்வு)

4.6.24